# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு அருந்ததியினர் நன்றி!... முதல் பக்கத் தொடர்ச்சி

**நமது திராவிட மாடல் பயணத்துக்கான மற்றுமோர் அங்கீகாரமாக இன்றைய உச்சநீதிமன்றத் தீர்ப்பு அமைந்திருக்கிறது!**

**முறையாகக் குழு அமைத்து, அதன் மூலம் திரட்டப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு அருந்ததியர் சமுதாயத்திற்கான 3% உள்ஒதுக்கீட்டைத் தலைவர் கலைஞர் கொடுக்க, அதற்கான சட்ட முன்வடிவைப் பேரவையில் நான் அறிமுகம் செய்து, நிறைவேற்றித் தந்தோம். இந்தச் சட்டத்தை உச்ச நீதிமன்றத்தின் ஏழு நீதிபதிகள் கொண்ட அமர்வு உறுதிசெய்திருப்பது பெருமகிழ்ச்சியளிக்கிறது.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருந்தார்.

**நிர்வாகிகள் சந்திப்பு!**

இதனைத் தொடர்ந்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (3.8.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், கழக அரசால் 2009ஆம் ஆண்டு சட்டமன்றப் பேரவையில் அறிமுகம் செய்து நிறை வேற்றப்பட்ட அருந்ததியினருக்கான 3 சதவிகித உள் இட ஒதுக்கீடு சட்டம் செல்லும் என்று உச்சநீதிமன்றம் உறுதி செய்து தீர்ப்பு அளித்திருப்பது திராவிட மாடல் அரசிற்கு கிடைத்த வெற்றி என்று பாராட்டி, வாழ்த்து தெரிவித்து, அருந்ததியினர் சமூகத்தின் சார்பில் ஆதித்தமிழர் பேரவை தலைவர் அதியமான், திராவிடர் தமிழர் கட்சி தலைவர் வெண்மணி, தமிழ் புலிகள் கட்சியின் நாகை திருவள்ளுவன், ஆதித்தமிழர் கட்சியின் ஜக்கையன், தமிழ்நாடு சாக்கிய அருந்த்தியர் சங்கத்தின் எழுத்தாளர் மதிவண்ணன், ஆதிதமிழர் ஜனநாயக பேரவையின் பௌத்தன், ஆதித்தமிழர் மக்கள் கட்சியின் எஸ்.டி. கல்யாணசுந்தரம், கொங்கு விடுதலை புலிகள் கட்சியின் விஸ்வநாதன்,



அருந்ததியினருக்கான 3 சதவிகித உள் இட ஒதுக்கீடு சட்டம் செல்லும் என்று உச்சநீதிமன்றம் உறுதி செய்து தீர்ப்பு அளித்திருப்பதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு அருந்ததியினர் சமூகத்தைச் சேர்ந்த அமைப்புகள், இயக்கங்கள், மற்றும் சங்கங்களைச் சேர்ந்த நிர்வாகிகள் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

திராவிட தமிழர் எழுச்சி கழகத்தின் தமிழ்மணி, சமூக நீதி மக்கள் கட்சியின் வடிவேல் ராமன், ஜெய் பீம் மக்கள் கட்சியின் அறிவழகன், விடுதலை வேங்கைகள் கட்சியின் தமிழன்பன், திராவிட எழுச்சி பேரவையின் சக்திவேந்தன், திராவிடர் புரட்சிக் கழகத்தின் சௌந்தர், தமிழ்நாடு அருந்ததியர் சங்கத்தின் இராசேகர், அருந்ததி கட்சியின் புருஷோத்தமன், தலித் விடுதலை இயக்கத்தின் சசிகுமார் கிச்சா, தமிழ் சிறுத்தைகள் கட்சியின் அகத்தியன், அருந்ததியர் சங்கத்தின் சுப்பிரமணி, அனைத்து அருந்ததியர் மக்கள் நல பேரவையின் துரை பாலகுரு,

சமநீதி புலிகள் கட்சியின் வெள்ளை பாண்டியன், தேசிய திராவிட கட்சியின் டி.கே. முருகேசன், அருந்ததியர் மக்கள் இயக்கத்தின் பிரதாபன், ரீடு தொண்டு நிறுவனத்தின் கருப்புசாமி, அருந்ததியர் சமூகம் மடத்தின் செல்வகுமார், அருந்ததியர் பெண்கள் இயக்கம் மற்றும் தொண்டு நிறுவனத்தின் திருமதி அலமேலு, மாவீரன் பொல்லான் வாரிசுதாரர்கள் ராஜன் முருகன், அருந்ததியர் விடுதலை முன்னணி, அறம் மக்கள் கட்சி, தலித் விடுதலை கட்சி உள்ளிட்ட 45 அருந்ததியினர் அமைப்புகள், இயக்கங்கள், மற்றும் சங்கங்களை சேர்ந்த நிர்வாகிகள் நேரில் சந்தித்து தங்களது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டனர்.

இந்த நிகழ்வின்போது, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, வனத்துறை அமைச்சர் எம்.மதிவேந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ. ராசா மற்றும் அந்தியூர் செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி மற்றும் இ. பரந்தாமன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.எஸ். பாரதி, கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை ஆகியோர் உடனிருந்தனர்.

# ‘சிறுவர் இயற்கைப் பூங்கா!’ - முதல்வர் திறந்து வைத்தார்!

## முதல் பக்கத் தொடர்ச்சி

மேற்பட்ட மாணவர்கள் பூங்காவில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் பங்கேற்கின்றனர்.

2022-23ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், இளம் வயதிலிருந்தே வனம் மற்றும் வன விலங்குகளைப் பற்றிய விழிப்புணர்வைக் குழந்தைகளுக்கு ஏற்படுத்த, கிண்டி குழந்தைகள் பூங்காவை மறுவடிவமைத்து, பறவைகள், வண்ணத்துப்பூச்சிகள், விலங்குகள் உள்ளடங்கிய இயற்கைப் பூங்காவாக அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, வனம் மற்றும் வனவிலங்குகள் பற்றிய விழிப்புணர்வை சிறு வயதிலிருந்தே குழந்தைகளுக்கு ஏற்படுத்துவதற்காக தற்போதுள்ள கிண்டி சிறுவர் பூங்கா புனரமைக்கப்பட்டு 30 கோடி ரூபாய் செலவில் சிறுவர்களுக்கு இயற்கை பூங்காவாக அமைக்கப்பட்டுள்ளதை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**பூங்காவின் சிறப்பம்சங்கள்!**

இப்பூங்கா திறப்பு விழாவின் போது, வனவிலங்குகளை மீட்பதற்கும், வனப்பகுதிகளில் ஏற்படும் காட்டுத்தீ போன்ற விபத்துகளை தடுக்கும் பணிகளை மேற்கொள்வதற்காகவும் 9 நவீன வாகனங்களை (All Terrain Vehicles) முதலமைச்சர் அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து, இப்பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள வேடந்தாங்கல் பறவைகள் இருப்பிடத்தை திறந்து வைத்து, பூங்காவில் ஏற்படுத்தப்பட்டுள்ள மேம்படுத்தப்பட்ட பல்வேறு வசதிகளை பார்வையிட்டார்.

தமிழ்நாட்டிலேயே முதன்முறையாக இந்தப் பூங்காவில் 2800 சதுர மீட்டர் பரப்பளவில் மிகப் பெரிய நீர்வாழ் பறவைக் கூடம், வன உயிரின விழிப்புணர்வு மையம், விலங்குகள் மற்றும் பறவைகளின் விவரங்கள் அறிந்து கொள்ளும் வகையிலான LED மின் திரைகள், நூலகம், நிர்வாக கட்டடம், அழகிய நுழைவு வாயில், நீருற்றுகள், செல்பி பாயிண்ட், குழந்தைகளுக்கான விளையாட்டுப் பகுதி, மழை நீர் வடிகால் வசதிகள், நடைபாதைகள், சிசிடிவி கண்காணிப்பு கேமராக்கள் போன்ற வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும், பார்வையாளர்களுக்கு உணவு மற்றும் சிற்றுண்டி கிடைக்கும் வகையில் நவீன கட்டமைப்புடன் கட்டப்பட்டுள்ள இரண்டு சிற்றுண்டி கூடங்கள், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையங்கள், புதிய கழிவறைகள், மேம்படுத்தப்பட்ட வாகனம் நிறுத்துமிடம் போன்ற வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. அத்துடன், மாற்றுத் திறனாளிகள் மற்றும் முதியோர்களுக்கு ஏற்ற வகையில் அவர்களின் தேவைகள் அறிந்து இப்பூங்காவில் சிறப்பு வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

**“ஒருங்கிணைந்த யானைகள் கணக்கெடுப்பு அறிக்கை 2024”**

தென்னிந்திய மாநிலங்களான கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு மற்றும் ஆந்திரப் பிரதேசத்தின் எல்லையோர மாவட்டங்களில் ஒருங்கிணைந்த யானைகள் கணக்கெடுப்பு 23.5.2024 முதல் 25.5.2024 வரை நடத்தப்பட்டது. இந்த கணக்கெடுப்பு தமிழ்நாட்டில் உள்ள 26 வனப் பிரிவுகளில் நடத்தப்பட்டது. இக்கணக்கெடுப்பில் 1,836 வனத்துறை ஊழியர்கள் மற்றும் 342 தன்னார்வலர்கள் என மொத்தம் 2,178 நபர்கள் ஈடுபட்டனர். இந்த கணக்கெடுப்பில், சேகரிக்கப்பட்ட தகவல்கள் முறையாக பகுப்பாய்வு செய்யப்பட்டு, 26 வனப் பிரிவுகளில் யானைகளின் எண்ணிக்கை மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த கணக்கெடுப்பானது யானைகளின் எண்ணிக்கை, பாலின விகிதம், யானைகளின் இயக்கவியல் மற்றும் யானைகளின் வாழ்விடத்தை சிறப்பாக நிர்வகிப்பதற்கு யானைகளின் பயன்பாட்டின் பரப்பளவு பற்றிய தெளிவான விவரங்களை வழங்கும். தமிழகத்தில் யானைகளின் எண்ணிக்கையையும் அதன் வாழ்வியல் முறைகளையும் அறிந்து கொள்ள உதவிடும் 2024ஆம் ஆண்டிற்கான ஒருங்கிணைந்த யானைகள் கணக்கெடுப்பு அறிக்கையை முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்.

**தமிழ்நாட்டில் 3063 யானைகள்!**

2017 கணக்கெடுப்பின்படி தமிழகத்தில் யானைகளின் எண்ணிக்கை 2,761 ஆக இருந்தது. தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான அரசு பொறுப்பேற்றதிலிருந்து யானைகளின் பாதுகாப்பிற்காக மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக ஒருங்கிணைந்த யானைகள் கணக்கெடுப்பு அறிக்கை 2023ன் படி தமிழகத்தில் யானைகளின் எண்ணிக்கை 2,961 ஆக உயர்ந்தது. தற்போது அதன் தொடர்ச்சியாக, 2024 ஆம் ஆண்டிற்கான யானைகள் கணக்கெடுப்பு அறிக்கையின்படி தமிழகத்தில் தற்போது யானைகளின் எண்ணிக்கை 3063 ஆக உயர்ந்துள்ளது.

தமிழ்நாடு அரசு மேற்கொண்ட பல்வேறு வன உயிரின பாதுகாப்பு நடவடிக்கைகள், குறிப்பாக யானைகள் பாதுகாப்பு இயக்கத்தின் மூலமாக மேற்கொண்ட நடவடிக்கைகள் வாயிலாக தமிழ்நாட்டில் யானைகள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அகத்திய மலை யானைகள் காப்பகம், தமிழ்நாடு யானைகள் பாதுகாப்பு இயக்கம், யானைகள் வாழிடங்களை பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல் போன்ற தமிழ்நாடு அரசின் நடவடிக்கைகளும் இதற்கு காரணமாக விளங்கின என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்ச்சியில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், வனத் துறை அமைச்சர் எம்.மதிவேந்தன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி. தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி. பிரபாகர ராஜா, துணை மேயர் மு. மகேஷ் குமார், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. செந்தில் குமார், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை இயக்குநர் ஆ.ர. ராகுல் நாத், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறை தலைவர்) சுதான்சு குப்தா, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரினக்காப்பாளர் ஸ்ரீனிவாஸ் ஆர். ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## நாகை சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்

# அ.ராஜமாணிக்கம் புதல்வர் அன்புதுரை மறைவு!

## மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் அஞ்சலி!

நாகை, ஆக. 4 -

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் இளமைக் கால நண்பரும், கீழ்வேளூர் ஒன்றிய முன்னாள் பெருந்தலைவர், கீழ்வேளூர் ஒன்றிய முன்னாள் அவைத் தலைவர் வெங்கடங்கால் இரா.சந்தானம் மருமகனும், நாகை சட்டமன்ற முன்னாள் உறுப்பினர், பொதுக்குழு முன்னாள் உறுப்பினர் மறைந்த அ..ராஜமாணிக்கம் நாகை நகர் மன்ற முன்னாள் தலைவர் வனஜா இணையர்களின் மூன்றாவது மகனும் நாகை மாவட்ட கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை தலைவருமான இரா. தங்கதுரை, தொழிலாளர் முன்னேற்ற சங்க பேரவை நாகை மாவட்ட கவுன்சில் தலைவர் இரா. தம்பிதுரை ஆகியோரின் சகோதரர் இரா. அன்புதுரை (57) நேற்று 3.8.2024 காலை இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.



மறைந்த இரா.அன்புதுரைக்கு விமலா என்ற மனைவி உள்ளார். நாகை மகாலட்சுமி நகரில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்ட உடலுக்கு நாகை மாவட்ட தி.மு.க. செயலாளர், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவர் என கௌதமன் உள்ளிட்ட கழகத்தினர் நேரில் அஞ்சலி செலுத்தினர்.

## வயநாட்டில் 5வது நாளாக தொடரும் மீட்புப்பணி!

# உயிரிழந்தோர் எண்ணிக்கை 344 ஆக உயர்வு!

## உடல்களைத் தேடும் பணியில் ராணுவம் தீவிரம்!

வயநாடு, ஆக. 4 -

வயநாடு நிலச்சரிவில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 344 ஆக உயர்ந்துள்ள நிலையில், காணாமல் போன 250க்கும் மேற்பட்டோரை தேடும் பணியில் ராணுவம் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. கேரள மாநிலம் வயநாடு மாவட்டத்தில் உள்ள சூரல்மலை, முண்டக்கை, புஞ்சிரிமட்டம் ஆகிய இடங்களில் ஏற்பட்ட நிலச்சரிவு நாடு முழுவதும் பெரும் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தி இருக்கிறது. இந்த பயங்கர நிலச்சரிவு 3 கிராமங்களை அடியோடு அழித்து விட்டது. 5வது நாளாக இன்றும் மீட்பு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. வயநாடு நிலச்சரிவில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 344 ஆக உயர்ந்துள்ள நிலையில், காணாமல் போன 250க்கும் மேற்பட்டோரை தேடும் பணியில் ராணுவம் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. சூரல்மலையில் 599 வீடுகளும், முண்டக்கையில் 431 வீடுகளும், புஞ்சிரிமட்டத்தில் 35 வீடுகளும் மண்ணில் புதைந்துள்ளன. பலியானவர்களின் எண்ணிக்கை மேலும் பல மடங்கு இருக்கும் என்று அஞ்சப்படுகிறது. சூரல்மலை பகுதியில் மீட்புப் பணிகள் அனைத்தும் ஏற்கனவே முடிந்து விட்டன. முண்டக்கையில் பல அடி ஆழத்தில் குவிந்து கிடக்கும் சகதியை தோண்டியும், இடிந்து கிடக்கும் வீடுகள், கட்டடங்களுக்கு உள்ளும் நவீன உபகரணங்களை பயன்படுத்தி தேடும் பணி நடைபெற்று வருகிறது.

## முத்தமிழறிஞர் கலைஞரால் - இந்தியாவின் 3வது பெரிய மேம்பாலமாகக் கட்டப்பட்ட

# அண்ணா மேம்பாலத்தின் பொன்விழா - ரூ.10.85 கோடியில் புதுப்பிப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, ஆக.4-**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இந்தியாவின் மூன்றாவது பெரிய மேம்பாலமாக சென்னையில் 1973இல் கட்டிய அண்ணா மேம்பாலத்தின் பொன்விழாவை முன்னிட்டு ரூ.10.85 கோடியில் புதுப்பிக்கப்பட்டு வண்ண விளக்குகள் ஒளிர அழகு படுத்தப்பட்டுள்ள சென்னை அண்ணா மேம்பாலம் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (2.8.2024) சென்னையில், 1973ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட அண்ணா மேம்பாலத்தின் பொன்விழாவையொட்டி, 10 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்டு வண்ண விளக்குகள் ஒளிர அழகுபடுத்தப்பட்டுள்ள அண்ணா மேம்பாலத்தை திறந்து வைத்தார்.

தமிழ்நாட்டின் முதல் சாலை மேம்பாலமான அண்ணா மேம்பாலம் உட்பட சென்னை மாநகரில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கா கப் பல மேம்பாலங்களைக் கட்டிய பெருமை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களையே சாரும்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1969இல் முதலமைச்சராகப் பொறுப்பேற்றதற்குப் பின்னால் திட்டமிட்டு வடிவமைத்துக் கட்டப்பட்ட மிகப்பெரிய மேம்பாலம் அண்ணா மேம்பாலம். 1970 ஆம் ஆண்டு அப்போதைய சென்னை மாநகரில் ஜெமினி ஸ்டுடியோ அமைந்திருந்த அந்தப் பகுதியில் நுங்கம்பாக்கம் உத்தமர் காந்தி சாலை, இராதாகிருஷ்ணன் சாலை, தேனாம்பேட்டை சாலை, ஜி.என். செட்டி சாலை ஆகிய சாலைகள் சந்திக்கும் பகுதியில் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வந்தது. அந்த நெரிசலை நீக்கி அப்பகுதியில் தடையில்லாத சாலைப் போக்குவரத்தை உறுதிப்படுத்தும் வகையில் அண்ணா மேம்பாலம் கட்டப்பட்டு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1.7.1973 அன்று திறந்து வைக்கப்பட்டது.

பொதுவாக ஆறுகள், தாழ்வான பகுதிகள், இரயில் தண்டவாளங்கள் போன்ற பகுதிகளைக் கடப்பதற்குத்தான் மேம்பாலங்கள் கட்டப்படுவது வழக்கமாகும். ஆனால், சாலைகளில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை மட்டுமே கருத்தில் கொண்டு சென்னை மாநகரில் சாலை சந்திப்பில் முதன் முதலாகக் கட்டப்பட்ட மேம்பாலம் இது. ஜெமினி ஸ்டுடியோ அப்பகுதியில் அமைந்திருந்ததையொட்டி அப்பாலத்தைக் குறிப்பிடும் போது, “ஜெமினி மேம்பாலம்” என்று முதலில் அப்பாலம் கூறப்பட்டது. ஆயினும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்களைப் போற்றும் தம் நெறிகளில் ஒன்றாக அன்றைய நிலையில் இந்தியாவிலேயே மூன்றாவது பெரிய மேம்பாலமாகத் தாம் கட்டிய இந்தப் பாலத்திற்கு “அண்ணா மேம்பாலம்” எனப் பெயர் சூட்டி மகிழ்ந்தார்கள்.

சென்னை மாநகருக்கு வெளியூர்களில் இருந்து வருகை தருவோரும், சென்னை மாநகர மக்களும் இந்தப் பாலத்தைக் கடந்து செல்லும்போது வாகன நெரிசல்கள் இன்றி, விரைவாக செல்வதை இன்றும் நாம் காண முடிகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அண்ணா மேம்பாலம் கட்டப்பட்டு 50 ஆண்டுகள் நிறைவடைந்து பொன்விழா காணும் நிலையில் அதனைப் புதுப்பித்திட தமிழ்நாடு அரசின் சார்பில் ரூபாய் 8.85 கோடி ஒதுக்கீடு செய்தார்கள். மேலும், ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 2 கோடி பெறப்பட்டது. மொத்தம் 10 கோடியே 85 இலட்சம் ரூபாய்ச் செலவில் சென்னை அண்ணா மேம்பாலம் புதுப்பிக்கப்பட்டு வண்ண விளக்குகள் ஒளிர அழகுபடுத்தப்பட்டுள்ளது.

இதில் பாலத்தின் தூண்கள் GRC பேனல்கள் கொண்டு மறுசீரமைக்கப்பட்டுள்ளன. பாலத்தின் கீழ் அழகூட்டும் வகையில் பசுமையான செடிகள் ஒளிரும் மின்விளக்குகள், மக்கள் நடந்து செல்ல ஏதுவாக நடைபாதை, செயற்கை நீரூற்று ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன.

மேலும், திராவிட கட்டடக் கலையைப் பறைசாற்றும் வகையில் பாலத்தின் முகப்பில் உள்ள தூண்கள், பூங்கா பகுதியில் யாழி சிற்பங்கள், முக்கோண ஸ்தூபிகள், பித்தளைப் பலகையில் பேரறிஞர் அண்ணா அவர்களின் பொன்மொழிகள் பொறிக்கப்பட்டுள்ளன.

பொன்விழா ஆண்டை முன்னிட்டு புதுப்பொலிவுடன் புனரமைக்கப்பட்டுள்ள அண்ணா மேம்பாலத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்றைய தினம் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா.எழிலன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக் குழு தலைவர் நே.சிற்றரசு, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறைச் செயலாளர் டாக்டர் ஆர்.செல்வராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.